செ.வெ.எண் : 10/ செப்டம்பர் நாள் : 05.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சார்ந்த 9 ஆசிரியர்களுக்கு கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது வழங்கி கௌரவித்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (05.09.2021) பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.முருகேசன், அவர்கள், ஆகியோர் முன்னிலையில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் 2021-ஆம் ஆண்டிற்கான "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது"-ஐ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சார்ந்த 9 ஆசிரியர்களுக்கு வழங்கி பாராட்டினார்கள்.

இவ்விழாவில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், பேசியதாவது:

குழந்தைகளின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது ஆசிரியர் பணி என்பது தொழில் அல்ல தொண்டு, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வியறிவு வழங்குவதோடு, அவர்களது தனித்திறன்களை மென்மேலும் வளர்த்திடவும் சிறந்த குடிமக்களாக உயர்த்திடவும் அயராது உழைக்கிறார்கள். தமிழக அரசு வழிகாட்டுதலின்படி 9 முதல் 12ஆம் வகுப்பு வரை செப்டம்பர் 1ஆம் தேதி முதல் வகுப்புகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது நமது மாவட்டத்தில் 97% ஆசிரியர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இவ்விருது பெறும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

முன்னதாக 30 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்கள், வழங்கினார்கள். இவ்விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர் சாமி. சத்தியமூர்த்தி அவர்கள், முதல்வர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருமதி.மு.புனிதம் அவர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.கோ.முத்துசாமி, அவர்கள், (இராமநாதபுரம்) திருமதி.மு.முருகம்மாள் அவர்கள், (மண்டபம்) திரு.மு.சேதுராமு அவர்கள், (பரமக்குடி) உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**